## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 43/2021

PW1 – திரு.இராமச்சந்திரன் நாள். 11.09.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் எவ்வளவு எங்கு படித்தேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன், எட்டாம் வகுப்பு வரை திணைக்காத்தான் கிராமத்தில் படித்தேன், ஒன்பதாம் வகுப்பு தேவகோட்டையில் படித்தேன். 2ம் வாதி படித்த நபர் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளார். பள்ளி மாற்றுச் சான்றிதழில் எங்களின் தாய் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 வாரிசு சான்றிதழில் யார் பெயரை மனுதாரர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் தான் மனு செய்தேன். எனது தாயார் எனது தகப்பனாருக்கு முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து யாருடையது என்றால் எனது தகப்பனார் வழி தாத்தாவின் சொத்து. எனது தகப்பனார் தாவா சொத்து தொடர்பாக கிரையம் ஏற்படுத்த இருந்தால் அச்சொத்தில் எனது தாயார் பங்க கேட்க உரிமை இல்லை என்றால் நான் வெளி நாட்டில் இருந்ததால் மேற்படி கிரையத்தை பற்றி தெரியாது. கிரையம் ஏற்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் கிரையம் செல்லக்கதக்கல்ல என்ற பரிகாரம் கேட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு கேட்காததால் இவ்வழக்கு கால வரையறை தோசத்தின் அடிப்படையில் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 2007ல் கிரையம் கொடுக்கப்பட்டதால் 2019ம் ஆண்டுக்குள் சுவாதீனம் தொடர்பான பரிகாரத்தை

கேட்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதிகளின் மூன்று பங்கிற்கான நீதிமன்றத்தை கட்டணத்தை தான் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் பிரதிவாதி மீது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்க தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் பெயர் காந்தி என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்ற விவரங்களை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொர்ணம் என்ற மனைவி எனது தகப்பனாருக்கு இல்லை என்றும், எனது தாயாரான காந்தி மட்டுமே எனது தகப்பனாரின் மனைவி என்று சொன்னால் சரியல்ல, சொர்ணம் முதல் மனைவி, காந்தி இரண்டாம் மனைவி என்று இரண்டு மனைவிகள் ஆவார்கள். முதல் மனைவி சொர்ணத்திற்கு குழந்தைகள் இல்லை என்றும், வாதிகள் நாங்கள் காந்தியின் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். எனது ஊரில் மாணிக்கம், சொர்ணம் என இன்னொரு தம்பதிகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. எனது ஊரில் மாணிக்கம், சொர்ணம் என இன்னொரு தம்பதிகள் பெயர்களை பயன்படுத்தி வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது மாணிக்கம் என்ற இன்னொரு நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஒரு வேளை தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு இருந்தாலும் 2007ம் ஆண்டு கிரையம் கொடுத்து விட்ட படியால் அதில் உரிமை கேட்க என்னதால் முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து தொடர்பாக பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய முடியும், விளம்புகை பரிகாரம் கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை